IN THE COURT OF SUBORDINATE JUDGE, ERANIEL.
O.S. No.99/2021
Deposition of Witness for PW1.

Name : திரு. தயா மாதவன்
Father Name :
Age :
Calling :
Village :
Taluk :
District :
Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 on the day of 25.08.2025.

சத்தியபிரமாணத்தின் பேரில் சாட்சியமளிக்கிறார்.
முதல் விசாரணைத் தொடர்ச்சி

எனது பெயரில் உள்ள வழக்குப் பட்டிகை சொத்திற்கான கணினிப்பட்டா வா.சா.ஆ.9. ரீசர்வே எண்.271 க்கான புல வரைபடம் பதிவிறக்கம் செய்யப்பட்டது வா.சா.ஆ.10. ரீசர்வே எண்.271/5 க்கான புல வரைபடம் 11.

1 மற்றும் 2 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை

நான் பார்மசி டிப்ளமோ படித்திருக்கிறேன். நான் தற்போது K.M.P National Nursery and primary school ல் correspondent ஆக உள்ளேன். நான் அரசு அங்கீகாரம் பெற்ற தட்டச்சு பயிற்சி நிலையம் வைத்து நடத்தி வருகிறேன். தாவா இடம் திங்கள் சந்தை பஸ் ஸ்டான்டில் இருந்து சுமார் 200 மீ தூரம் இருக்கும். திங்கள் நகர் பஸ் ஸ்டான்டிற்கும் தாவா இடத்திற்கும் இடையே ராதா கிருஷ்ணன் கோயில் அமைந்துள்ளது என்றால், சரிதான். தாவா இடம் எனது தாத்தா கே. மாதவன் பிள்ளையின் பூர்வீக சொத்து ஆகும். வழக்குப் பட்டிகை சொத்து எனது தாயார் மற்றும் சகோதரியின் விடுதலைப் பத்திரம் எழுதிக் கொடுத்து எனக்கு உரிமைக் கிடைத்தது என்றால், சரிதான். அந்த விடுதலைப் பத்திரத்தில் எனக்கு ரீசர்வே எண்.271/26 ல் 1.500 சென்ட்கள் எழுதிக் கொடுத்து உள்ளார்கள். அதே விடுதலைப்பத்திரத்தில் எனது தாயாரும், எனது சகோதரியும் ரீசர்வே எண்.271/5 ல் 16.250 சென்ட்கள், 271/24 ல் 7.500 சென்ட்கள் மற்றும் 271/25 ல் 8.750 சென்ட்கள் எழுதிக் கொடுத்திருக்கிறார்கள். இந்த

அனைத்து சொத்துகளும் ரீசர்வே எண்.271ல் உள்ளது என்றால், சரிதான். ரீசர்வே எண்.271/5ல் உள்ள சொத்து மேற்படி விடுதலைப் பத்திரத்தின் அடிப்படையில் தான் எனக்கு உரிமைக் கோருகிறேன். எனது அப்பாவிற்கு 271/5 உயில் மூலமாக பாத்தியப்பட்டது. இந்த வழக்கினைப் பற்றிய விபரங்கள் எனக்கு முழுமையாகத் தெரியும். ரீசர்வே எண்.271/5 சொத்தினை எனது தகப்பனார் 1981ல் ஸ்ரீதரன் பிள்ளையிடம் இருந்து கிரயம் வாங்கினார். ரீசர்வே எண்.271/5ல் எனது வீடும், எனது பள்ளியும் உள்ளது என்றால், சரியல்ல. எனது பள்ளி மட்டும் உள்ளது. 271/5ன் நான்கு பக்க எல்லைகள் எனக்கு நினைவில் இல்லை. எனது தகப்பனார் வழி தாத்தா மாதவன் பிள்ளை, எனது பெரியப்பா வேலப்பனுக்கு ரீசர்வே எண்.271/26ல் 5 சென்டும், எனது அப்பாவிற்கு கிழக்கனைய 10 சென்டும், நடுவில் உள்ள 5 சென்டை எனது சித்தப்பா கொச்சு பாபுவிற்கும் உயிலில் எழுதி வைத்தார். இந்த 3 பேருக்கும் அந்த 20 சென்ட் ஒரே கிடப்பாக உள்ளது என்றால், சரிதான். 271/26ல் மொத்தம் பட்டாதார்கள் 6 பேர். அவர்கள் கூட்டுப் பட்டாதாரர்கள் தான். 271/26ல் உள்ள அனைத்து பட்டாதாரர்களையும் நான் கட்சி சேர்க்காததற்கு காரணம், மேற்கு பக்கத்தில் பவுண்ட்ரி இல்லாத காரணத்தால், இந்த பிரதிவாதிகள் இருவரை மட்டும் கட்சியாக சேர்த்து இருக்கிறேன். வழக்குப் பட்டிகை சொத்தினை ஒட்டி மேற்குப் பக்கத்தில் மாதவ குமார் மற்றும் சுரேஷ் ஆகியோரின் சொத்து உள்ளது. என்னுடைய சொத்திற்கு மேற்குப் பக்கம் எல்லை மது என்பவரின் சொத்து உள்ளது. மேற்கு பக்கம் அந்த மதுவிற்கு 2 1/2 சென்ட் இடம் உள்ளது. அதை தாண்டி மேற்கு பக்கம் தான் சுமிக்கு 2 1/2 சென்ட் இடம் உள்ளது. எனக்கு தாவா இடத்தில் 5.659 சென்ட்கள் குறைவாக உள்ளது. எனது தகப்பனார் 10 சென்டில், 3.341 சென்டுகள் இடத்தை, அயரின் விமலாவிற்கு கிரயம் செய்து கொடுத்து விட்டார். அந்த அயரின் விமலாவும், கூட்டுப் பட்டாதாரர் ஆக உள்ளார். அவரை நான் இந்த வழக்கில் கட்சியாக சேர்க்கவில்லை. காரணம் விலைக் கிரயம் கொடுத்து விட்டதால் நான் அவரை கட்சியாக சேர்க்கவில்லை. அயரின் விமாலாவின் இடத்திற்கும் எங்கள் இடத்திற்கும் உட்பிரிவு செய்யப்படவில்லை. எனது தகப்பனார் அந்த 10 சென்டில், மனோகர் வில்லியம்ஸ் என்பவருக்கு 1 சென்ட் கிரயம் கொடுத்தார். அந்த மனோகர் வில்லியம்ஸ் இடத்திற்கும் என்னுடைய இடத்திற்கும் உட்பிரிவு

செய்யப்படவில்லை என்றால், சரிதான். அயரின் விமலா எனது அப்பாவிடம் இருந்து வாங்கிய இடத்தில் அடுக்குமாடி குடியிருப்பு கட்டி விட்டார். எனது தாத்தா எழுதிய உயிலில், தாவா 20 சென்ட்டில் வடக்குப் பக்கத்தில் 7 அடி பாதை குறிப்பிடப்பட்டுள்ளது என்றால், சரிதான். அந்த பாதை ராதாகிருஷ்ணன் கோயிலில் ரோட்டில் இருந்து எனது அத்தை காமாட்சி சுகந்தத்தின் வீடு வரை செல்கிறது என்றால், சரிதான். அந்த பாதையை எனது தாத்தாவின் உயிலின் படி யாரும் அடைத்து வைக்கக் கூடாது என்றால், சரிதான். ரீசர்வே எண்.271/26 ல் வடக்குப் பக்கம் ஸ்ரீதரன் பிள்ளை எனது தகப்பனாருக்கு கிரயம் கொடுத்த இடம் என்றால், சரிதான். இந்த வழக்கில் தாக்கல் செய்த நீதிமன்ற ஆணையர் அறிக்கை மற்றும் வரைபடத்தை நான் பார்த்தேன். அதில் எனக்கு 5.115 சென்ட்களும், 6.549 சென்ட்கள் பிரதி வாதிகளுக்கும் என்று குறிப்பிட்டிருக்கிறார். ஆணையர் தாக்கல் செய்துள்ள வரைபடத்தில், தாவா இடத்தில் பிரதிவாதிகளுக்கு 6.549 சென்டும், எனக்கு 5.115 சென்ட்களும், பாதை 0.544 Square Links, எனது அப்பா கிரயம் கொடுத்த 3.341 சென்ட்கள் மொத்தம் வரைபடத்தின் படி எனக்கு 9 சென்ட்கள் இடம் வருகிறது என்று குறிப்பிட்டும், ஆணையாளர் எனது தகப்பனார் மனோகர் வில்லியத்திற்கு கிரயம் கொடுத்த 1 சென்ட் இடத்தை ஆணையர் அறிக்கை மற்றும் வரைபடத்தில் குறிப்பிடவில்லை என்றாலும், சரிதான். ஆணையர் வரைபடத்தில் நான்கு எல்லைகள் குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால், சரிதான். ஆணையர், வழக்குப் பட்டிகை சொத்தை பார்வையிட, தாலுகா சர்வேயருடன் வந்தார். தாவா வழக்கில் முதல் முதலில் வழக்குரை தாக்கல் செய்த போது 6.651 சென்ட்கள் வழக்குப் பட்டிகை சொத்தாக குறிப்பிட்டு இருந்தேன். வழக்குப் பட்டிகை சொத்து சம்பந்தமாக முழுமையான விபரங்கள் எனக்கு தெரியாது என்றாலும், எனது பள்ளியின் அருகில் பிரதிவாதிகளின் சொத்து அமைந்துள்ளதால், அந்த இடத்தை பள்ளி மைதானமாக பயன்படுத்தும் எண்ணத்துடன் உண்மைக்குப் புறம்பாக விபரங்களை கூறி இந்த

வழக்கை பிரதிவாதிகளுக்கு எதிராக நான் தாக்கல் செய்து அதற்கு ஆதரவாக தவறுதலாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால், சரியல்ல.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சி படித்து பார்த்து சரியென ஒப்புக்கொண்டு என் முன்னிலையில் கையெழுத்துச் செய்தார்.

சார்பு நீதிபதி,
இரணியல்.